# ஆண்டறிக்கை 2020 - 2021

## தமிழ்த்துறை

2020-2021 ஆம் கல்வியாண்டில் தமிழ்த்துறையின் சார்பாக, அருந்தமிழ் ஆறு என்னும் இணையவழிக் கருத்தரங்கம் 01-07-2020 முதல் 06-07-2020 வரை ஆறு நாட்கள் நடத்தப்பட்டது. இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ், ஊடகத்தமிழ், அயலகத்தமிழ், அறிவியல் தமிழ் என்று அமைந்த இக்கருத்தரங்கத்தில் பல்துறை வல்லுநர்கள் உரை வழங்கினர். பள்ளி, கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், ஆய்வாளர்கள் எனப் பலரும் ஆர்வத்துடன் கருத்தரங்கில் பங்கு கொண்டனர். நாள்தோறும் பின்னூட்டப் படிவம் அனுப்பியவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. துறைத்தலைவர் முனைவர் சி. கலைமகள் தலைமையில் துறை ஆசிரியர்கள் அனைவரும் கருத்தரங்கைப் பொறுப்பேற்று நடத்தினர்.

2020-2021 ஆம் கல்வியாண்டில் இணையவழியாகவும் (UG) நேரடியாகவும் (MA & M. Phil.) மாணவியர் சேர்க்கை நடைபெற்றது. இளங்கலையில் 58 மாணவியரும் முதுகலையில் 14 மாணவியரும் ஆய்வியல் நிறைஞர் வகுப்பில் 4 மாணவியரும் சேர்க்கை பெற்றனர்.

இளங்கலை 2, 3 ஆம் ஆண்டு மற்றும் முதுகலை இரண்டாமாண்டு மாணவியர்க்கு 03-08-2020 அன்று வகுப்புகள் தொடங்கப்பட்டன. இளங்கலை முதலாமாண்டுக்கு 31-08-2020 அன்றும், ஆய்வியல் நிறைஞர் மாணவியர்க்கு 23-11-2020 அன்றும் வகுப்புகள் தொடங்கப்பட்டன.

கோவிட் 19 பெருந்தொற்று காரணமாக வகுப்புகள் இணையவழியில் தொடங்கி நடத்தப்பெற்றன. வகுப்புத் தேர்வுகள், மாதிரித் தேர்வுகள், பருவத்தேர்வுகள் இணையவழி நடத்தப்பெற்றன.

இக்கல்வியாண்டில் 8 முனைவர்ப் பட்டப் பொது வாய்மொழித் தேர்வுகள் தமிழ்த்துறையில் நடைபெற்றன.

| வ.எண் | நாள் | ஆய்வாளர் | நெறியாளர் |
| --- | --- | --- | --- |
| 1 | 12-08-2020 | சு. கவிதா | முனைவர் சு. தமிழ்ச்செல்வி |
| 2 | 21-08-2020 | அ. மகாலட்சுமி | முனைவர் ப. பத்மினி |
| 3 | 09-10-2020 | லக்ஷ்மி ஜெயபிரியா | முனைவர் இரா. அனுராதா |
| 4 | 15-10-2020 | கி. சரண்யா | முனைவர் பெ. சிவசக்தி |
| 5 | 11-11-2020 | ஜா. புஜ்ஜி | முனைவர் சு. தமிழ்ச்செல்வி |
| 6 | 20-01-2021 | இ. மேரி இமாகுலேட் ராஜகுமாரி | முனைவர் சி. கலைமகள் |
| 7 | 19-03-2021 | ஆ. இராஜேஸ்வரி | முனைவர் பெ. சிவசக்தி |
| 8 | 13-05-2021 | கி. கல்பனா (அயலகம்) | முனைவர் கு. மங்கையர்க்கரசி |

ஒற்றைப் பருவத் தேர்வுகள் 07-12-2020 முதல் 21-12-2020 வரையும், 25-01-2021 முதல் 02-02-2021 வரையும் இணைய வழியில் நடத்தப்பட்டன. தேர்வுப் பொறுப்பாளராக முனைவர் இர. சிவசக்தி செயல்பட்டார்.

இரட்டைப் பருவத் தேர்வுகள் 22-04-2021 முதல் 26-05-2021 வரையும், 22-06-2021 முதல் 29-06-2021 வரையும் இணைய வழியில் நடத்தப்பெற்றன. தேர்வுப் பொறுப்பாளராக முனைவர் இரா. அனுராதா செயல்பட்டார்.

ஒற்றைப் பருவ நிலுவைத் தேர்வுகளை முனைவர் இர. சிவசக்தியும், இரட்டைப் பருவ நிலுவைத் தேர்வுகளை முனைவர் இரா. அனுராதாவும் பொறுப்பேற்று நடத்தினர்.

இளங்கலை, முதுகலை, ஆய்வியல் நிறைஞர் பட்டங்களுக்குரிய பாடத்திட்ட Mapping வரைவு உருவாக்கியளிக்கப்பட்டது. வரைவு உருவாக்கத்தை முனைவர் சு. தமிழ்ச்செல்வி பொறுப்பேற்றுச் செயல்படுத்தினார்.

2019-2020 ஆம் கல்வியாண்டுக்குரிய இறுதிப் பருவத் தேர்வுகள் 2020 செப்டம்பர் மாதத்தில் இணையவழி நடத்தப்பட்டன. இத்தேர்வுகளை முனைவர் இர. சிவசக்தி பொறுப்பேற்று நடத்தினர்.

முனைவர் இரா. அனுராதா, முனைவர் கமலா முருகன், திருமதி. ம. கஸ்தூரிபாய், முனைவர் திரிபுரசுந்தரி கார்த்திகேயன் ஆகியோர் புத்தாக்கப் பயிற்சி பெற்றனர்.

கல்லூரியில் சேருவதற்காக மாணவர்கள் விண்ணப்பங்களை இணையவழிப் பதிவேற்றம் செய்வதற்கான மாதிரிப் பதிவேற்றம் 18 & 19-07-2020 (இளங்கலை) 06-10-2020 (முதுகலை) ஆசிரியர்கள் மேற்கொண்டனர்.

மாணவியர் வேலைக்காக நேர்காணலுக்குத் தயார் செய்துகொள்ள வேண்டிய வழிமுறைகளை மிக எளிமையாகவும் தெளிவாகவும் காணொளியாக அமைத்துத்தந்தார் முனைவர் இரா. அனுராதா (30-03-2021).

முதுகலைப் பாடத்திட்டக் குழுக்கூட்டம் 09-04-2021 அன்று நடைபெற்றது.

கல்லூரி வேலைவாய்ப்பு வழிகாட்டுதலின்படி, தமிழ்த்துறையின் மாணவியர் 20 பேர் பணிநியமனத்துக்கான வாய்ப்புப் பெற்றனர்; நான்கு மாணவியர் காத்திருப்போர் பட்டியலில் இடம் பெற்றனர்.

கோவிட் 19 தடுப்பூசி செலுத்திக் கொண்ட / செலுத்திக் கொள்ளாத ஆசிரியர்களின் விவரங்கள் 17-04-2020 அன்று அளிக்கப்பட்டன.

மார்ச் முதல் வாரத்தில் அரசு வழங்கிய SIM Card மாணவியர்க்கு விநியோகிக்கப்பட்டது.

26-03-2021 அன்று நடைபெற்ற ஸ்ரீமதி ராஜம் ராமமூர்த்தி அறக்கட்டளைப் பேச்சுப் போட்டியில், M. புவனேஸ்வரி, (I BA) மேட்லின் லில்லி லியோனி (I MA), A. தேன்மொழி (I MA) ஆகியோர் முறையே முதல் மூன்று பரிசுகளாக ரொக்கப் பரிசு ரூ.1500, ரூ.1000, ரூ.750 பெற்றனர்.

03-03-2021 அன்று 100% வாக்களிப்பை உறுதி செய்வோம் என்னும் தலைப்பில் கட்டுரைப் போட்டியும்,வினாடிவினாவும் துறையில் நேரடியாக நடத்தப்பட்டன. முனைவர் சுகுணா சந்திர காந்தாமணி, முனைவர் திரிபுரசுந்தரி கார்த்திகேயன் போட்டிப் பொறுப்பாளர்களாக இருந்து செயலாற்றினர்.

~~10-08-2020 ஒரு Webinar இல் மாணவியர் பங்கேற்றனர்.~~

ஜூலை 2020 இல் SOSA நடத்திய போட்டிகளில் ஆய்வு மாணவிகள் P. சுகன்யா, S. கவிதா, D. பரிமளா, ஷாரு (III BA) வெற்றி பெற்றனர்.

துறைத்தலைவர் முனைவர் சி. கலைமகள், மூத்த ஆசிரியைகள் முனைவர் சு. தமிழ்ச்செல்வி, முனைவர் இர. சிவசக்தி, முனைவர் இரா. அனுராதா ஆகியோர் பல கல்விசார் அமைப்புகளில் Resource person களாகவும், பாட வல்லுநர்களாகவும் விளங்கியுள்ளனர். முனைவர் பட்ட வல்லுநர் குழு உறுப்பினர்களாகவும் தமிழ்த்துறை ஆசிரியைகள் இணையவழி செயலாற்றியுள்ளனர்.

துறை ஆசிரியைகள் பல்வேறு இணையவழிக் கருத்தரங்குகள், வினாடி வினாக்கள், போட்டிகள் ஆகியவற்றில் பெருமளவில் கலந்துகொண்டனர்.